DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : C**C 4/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : சேர்மக்கனி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25th **May** 2026.

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலியில் குடியிருந்து வருகிறேன். நான் கேட்டரிங் வேலைசெய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். 23.04.2013 ம் தேதி இரவு சுமார் 7.30 மணியளவில் எனது கணவர் மகேந்திரன் மீன்துள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது மீன்துள்ளியில் பிள்ளையார்கோவிலுக்கு அருகில் எதிரி கருப்பசாமியின் கறிக்கடைக்கு பக்கத்தில் இருந்து பெட்டிக்கடைக்கு முன்பு வண்டியை நிறுத்தி பீடி வாங்கி கொண்டிருந்தபோது எதிரி கருப்பசாமி எனது கணவரை பார்த்து "தேவிடியா மகனே உன்னாலையும், உன் அப்பனாலையும் தான் ஊரே கெட்டு போயிடுச்சு" என்று அசிங்கமாக பேசினார். எனது கணவர் எதிரியை அசிங்கமாக பேசாதே என்று கூறியதால் எனது கணவருக்கும் எதிரி கருப்பசாமிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. நான் சத்தம் கேட்டு எனது வீட்டிலிருந்து வந்த போது எதிரி கருப்பசாமியும் எனது கணவரும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு எனது 1 1/2 வயது மகனை இடுப்பில் தூக்கிக்கொண்டு அங்கு வந்து, எனது கணவரையும் எதிரி கருப்பசாமியையும் சத்தம் போட்டேன். எதிரி கருப்பசாமி கறிவெட்டும் அரிவாளை

வைத்து கொண்டு என்னை வெட்டுவதற்காக துரத்தினார். நான் ஓடும் போது எனது மகனுக்கு வலது பக்க தலையில் அந்த அரிவாளால் வெட்டுகாயம் ஏற்பட்டது. அதன்பிறகு எதிரி சின்னசாமி எனது கணவரின் இருசக்கர வாகனத்தில் கல்லை கொண்டு எறிந்து சேதப்படுத்தினார். அதன்பிறகு நாங்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து எனது மகனை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து எங்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். நாங்கள் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்ற பிறகு அங்கு வைத்து எனது மகனுக்கு சுமார் 2 மணிநேரம் சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். நாங்கள் மதுரையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எனது மகனுக்கு ஒருநாள் முழுவதும் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் 5 வருட காலத்திற்கு எனது மகனுக்கு மருந்துகொடுக்கவேண்டுமென்று அங்கு அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் நான் மருந்துகொடுத்துவந்தேன். இருப்பினும் எனது மகனுக்கு அந்த காயத்தால் தற்போது வரை பாதிப்பு உள்ளது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு நாங்கள் சிகிச்சைக்கு சென்றபோது அங்கு வந்த பனவடலிசத்தம் போலீசார் என்னிடமிருந்து சம்பவம் தொடர்பாக புகார்வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் போலீசாரால் என்னிடமிருந்து பதிவு செய்யப்பட்ட புகார்வாக்குமூலம். அந்த புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்களை போலீசார் விசாரணையிலும் எனது புகார் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நாங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது போலீசார் என்னிடம் புகார்வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னிடமிருந்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்த போலீசாரின் பெயர் மற்றும் பதவி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் கூறிய விபரங்களை எழுதிய பிறகு தான் கையொப்பம் பெற்றார்கள். புகார்வாக்குமூலத்தில் எனது மகனுக்கு சிறு காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேன். அது சிறு காயம் என்று கூறவில்லை. போலீசார் விசாரணையின்போது எனது மகனுக்கு சிறு காயம்ஏற்பட்டதாக கூறியுள்ளேன என்றால் காயம்ஏற்பட்டதாக கூறினேன். சிறு காயம் என்று கூறவில்லை. புகார்வாக்குமூலத்தில் எனது கணவருடைய வண்டியின் பதிவெண்ணை நான் குறிப்பிட்டு கூறினேனா என்றால் இல்லை. புகார்வாக்குமூலம் பதிவு செய்யப்படட பிறகு போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்களா என்றால் திருநெல்வேலி

மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதற்கு பின்னர் விசாரிக்கவில்லை. புகார்வாக்குமூலத்தில் நான் முதல் விசாரணையில்கூறிய சம்பவத்தால் உயிருக்கு பயமும், அவமானமும் ஏற்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். இவ்வழக்கின் சாட்சிகளாக காண்பிக்கப்பட்டுள்ள வைரவன், செல்வம், துர்க்கை முத்து, தங்கபாண்டியன் ஆகியோர் மீன்துள்ளியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எனது உறவினர்களா என்றால் இல்லை. அவர்கள் எங்கள் ஊரைசேர்ந்தவர்கள். மேற்படி நபர்கள் என் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு பனவடலிசத்திரம் காவல்நிலையம் வழியாகதான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையில் இடப்பிரச்சனை உண்டா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் எனது கணவருக்கும் இடையில் சம்பவம் நடப்பதற்கு முன்பு முன்பகை இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுடன் உள்ள முன்பகை காரணமாக பொய்யாக புகார்வாக்குமூலம் எதிரிகளுக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**